REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 3உ வியாழன் (20—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 4உ வெள்ளி (21—10—55) [இதழ் 109

ஒரிசா சட்ட சபையில் குழப்பமும் கூச்சலும்!

புவனேஸ்வரம், அக். 19—

ஒரிசா சட்ட சபையில் இன்று குழப்பமும் கூச்சலும் நிலவி இருக்கிறது.

பல எதிர்க் கட்சி உறுப்பினர்கள், 'சபைக் கூட்டம் ஒத்தி வைக்கப்படக்கூடாது' என்று கோரியதையும் மறுத்துவிட்டு, தலைவர் நவம்பர் 21-ந் தேதிவரை சபையை ஒத்திவைத்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

கழகத்தின் நற்பணி:

கைத்தறியாளர் பெறும் பலன்

உற்பத்தியை மிஞ்சுகிறது தேவை!

அமெரிக்காவிலும் தென்னாட்டுத் துணிக்கு கிராக்கி

சென்னை, அக். 19—

உற்பத்தியான கைத்தறித் துணிகள் விற்பனையாகாது தேங்கிக் கிடந்தமையால், தேம்பி அழுது நின்ற கைத்தறி நெசவாளரின் துயர் துடைக்க, தி. மு. கழகம் மேற்கொண்ட நற்பணி நாடறிந்த ஒன்றாகும்.

அவர்கள், மக்களிடையே கைத்தறி நெசவாளரின் துயர் குறித்து விளக்கம் தந்து. தேங்கிய துணிகளைத் தோளில் சுமந்துகொண்டு வீதிவீதியாகச் சென்று விற்றனர்; ளுக்குக் கைத்தறியாளரிடம் அனுதாபம் பிறக்குமாறு செய்தனர்; அரசாங்கத்தின் மூடியிருந்த கண்களைத் திறக்குமாறு செய்தனர்.

இவைகளின் விளைவாக, தேங்கிக் கிடந்த துணிகளை மக்கள் ஆர்வத்துடன் வாங்கினர்; நாட்டில் பல இலட்சம் பேர், 'கைத்தறி ஆடைகளையே வாங்குவது' என்று உறுதி பூண்டனர்.

அவ்வப்போது, கைத்தறித் துணித் தேக்கம் ஏற்பட்டதாகச் செய்தி கிடைத்தாலும், பொதுவாக, கைத்தறித் துணிக்கு நாட்டில் ஒரு மதிப்புத் தோன்றியிருக்கிறது என்பது உண்மையே.

அந்தவகையில் இப்போது பல ஆண்டுகளுக்குப் பிறகு, கைத்தறித் துணியின் உற்பத்தி அளவையும் மிஞ்சக்கூடியதாக, தேவை வளர்ந்திருக்கிறது என்ற செய்தி கிடைக்கிறது.

இப்போது திங்கள்தோறும் சராசரி உற்பத்தி மதிப்பு, ரூ. 35 கோடி பெறுமானது என்றும், இந்த அளவுக்குத் தேவை இருப்பதாகவும் மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறாராம்.

வரப்போகும் திங்கள்களில் தேவை இன்னும் அதிகமாகக் கூடும் என்றும், இதனை பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தியை அதிகரிப்பது கஷ்டமாயிருக்கக்கூடும் என்றும், அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும், அமெரிக்காவில், சென்னைக் கைத்தறிப் பொருட்களுக்கு ஏராளமான கிராக்கி ஏற்பட்டிருப்பதாயும், குறிப்பாக சென்னை கைகுட்டைகளுக்கு அமெரிக்காவில் தனிச் சிறப்புக் கிடைப்பதாகவும். அதனால் பெரும் அளவில் சென்னை கைத்தறிப் பொருள்களை அமெரிக்கா வாங்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

துவக்கத்தில், சுமார் ரூ. 20 இலட்சம் பெறுமான கைத்தறித் துணி வாங்க அமெரிக்கர் முற்படுவர் என்றும் கூறப்படுகிறது.

சர்க்கார் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வரும் நவம்பர் 1-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை கைத்தறித் துணி வாங்குவோருக்கு ரூபாய்க்கு இரண்டணா விகிதம் கழிவு தருவதற்கு திட்டமிட்டிருக்கின்றனர்; இதனால் மேலும் அதிகமான துணி விற்பனையாக வழி பிறக்கும் என்றும் தெரிகிறது.

60 பள்ளி மாணவிகள் கடத்தப்பட்டனராம்!

இரங்கூன், அக். 19—

'தனி நாடு தேவை' எனக் கூறி வரும் கரேன்களில் தீவிரவாதிகளாயிருக்கும் சிலர், இன்று தாடன் பகுதியில் உள்ள பள்ளி ஒன்றில் புகுந்து சுமார் 60 பள்ளிப் பெண்களைத் தூக்கிச் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

அந்தத் தீவிரவாதிகள், பள்ளி ஆசிரியை உட்பட பல மாணவிகளை அழைத்துச் சென்று, எழு முதல் 12 வயதுக்குட்பட்ட சிலரைத் திருப்பி அனுப்பிவிட்டனர் என்றும், திருப்பி அனுப்பப்பட்டவர்களிடம், தாங்கள் 'சிறை' வைத்திருக்கும், ஒவ்வொரு நபருக்கும் ரூ 500 மீட்புத் தொகை தந்தால் மட்டுமே அவர்களைத் திரும்ப அனுப்பமுடியும் என்ற குறிப்பு அனுப்பியிருப்பதாகவும் தெரியவருகிறது.

கைத்தறி நெசவாளர் மீது போலீசார் தடியடி

திருப்பூரில் கண்டன ஊர்வலம்

திருப்பூர், அக். 18—

சின்னாளப்பட்டியில் நெசவாளர்கள் மீது கடந்த அக்டோபர் 4-ந் தேதியன்று தடியடிப் பிரயோகம் செய்தும், சிலரைக் கைது செய்தும் கொடுமைப்படுத்தியதற்குக் கண்டனம் தெரிவிப்பதற்காக சுமார், 2,000 நெசவாளர்களடங்கிய கண்டன ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

அந்த ஊர்வலம் திருப்பூர் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கச் சார்பில் நடத்தப்பட்டது.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், நெசவாளர்களைப் போலீசார் தடிகொண்டு தாக்கியதற்குக் கண்டனம் தெரிவித்தும், கைது செய்தவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும் என்று கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மிசைத்தறிகள் துவக்குவதற்கு சர்க்கார் ஆதரவு தரக்கூடாது என்றும், கரை போட்ட சேலை, வேட்டி உற்பத்தியை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்றும் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'ஆந்திரம் வாழ்க' என்று எழுதுவது 'இந்திய ஒற்றுமை'க்கு ஆபத்தாம்!

ஐதராபாத் மந்திரி ஓலமிடுகிறார்

ஐதராபாத், அக். 18—

'வாழ்க ஆந்திரா' என்று தெலுங்குத் தோழர் ஒருவர் தனது முகவரி பொறித்த கடிதத் தாளில் அச்சிட்டிருக்கிறார்.

'இந்தியா வாழ்க' என்று எழுதப்படவேண்டிய இடத்தில், 'ஆந்திரா வாழ்க' என்று எழுதியிருப்பதால், இந்திய ஒற்றுமைக்குச் சீர்குலைவு தேடுவதாகும்—என்று காங்கிரஸ் மந்திரி ஒருவர் அலறியிருக்கிறார்.

இந்தத் தகவலை இங்கு நடைபெற்ற மாணவர் கூட்டம் ஒன்றில் வெளியிட்ட ஐதராபாத் விவசாய மந்திரி டாக்டர் எம் சென்ன ரெட்டி என்பார் சொன்னார்:—

"ஒருவரின் தாய்மொழிப் பற்றை ஓரளவுக்கே அனுமதிக்க முடியும்; மொழிவழி நாட்டுப்பற்று, நாட்டின் ஐக்கியத்திற்கு சீர்குலைவு தரக்கூடிய வகையில் அச்சுறுத்தும் அளவுக்கு இருத்தலாகாது; இது முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்; இன்றேல் இந்தியாவின் 'ஒற்றுமை' காப்பாற்றப்பட முடியாது," என்று ஓலமிட்டிருக்கிறார்.

பம்பாய் வேண்டுமென்ற கோரிக்கையைக் கைவிட...

மராட்டியருக்கு காங்கிரஸ் மேலிடம் நிர்ப்பந்தம்

டெல்லி பேச்சுக்களின் முடிவு

பம்பாய் நகரைத் தலைநகராக்க வேண்டும் என்று கோருவதை மராட்டியர் கைவிட்டால், மராட்டிய மாநிலம் அமைப்பதற்கு ஒப்ப, மாநிலக் குழுவின் சிபாரிசைத் திருத்துவதாகக் காங்கிரஸ் மேலிடத்தினர் மராட்டிய தூதுக் குழுவிடம் தெரிவித்திருப்பதாக நம்பப்படுகிறது.

பல்வேறு மொழி பேசும் மக்களின் ஒப்புதலையும் படிப்படியாகப் பெற்று, பம்பாயின் எதிர்காலம் குறித்து பின்னர் முடிவு செய்யலாம் என்றும், காங்கிரஸ் மேலிடம் யோசனை தெரிவித்ததாம்.

மராட்டியத் தலைவர்கள் இந்த யோசனைகள் குறித்து மராட்டிய காங்கிரஸ் செயற்குழுவைக் கூட்டி பரிசீலித்தபின் முடிவு கூறுவர் என்றும் தெரியவருகிறது.

இரயில்வே மந்திரியின் முன் 500 தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

கூட்டத்தில் பேசவிடாது குரல் எழுப்பினர்!

கோரக்பூர், அக். 18—

இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி இரயில்வே பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பைப் பார்வையிட்டுவிட்டுப் பேசுவதற்காகச் சென்றபோது, சுமார் 500 இரயில்வே தொழிலாளர்கள் கூடி நின்று, தங்கள் குறைகளை உள்ளடக்கிய ஒலிகளை முழக்கி கூட்டம் தடைபடுமாறு செய்திருக்கின்றனர்.

அவர்கள் செங்கொடிகளுடன், தங்களது கோரிக்கைகள் பொறித்த அட்டைகளையும் தாங்கி நின்றனர்; பல இரயில்வே அதிகாரிகள் தடுக்க முயன்றும் அந்தத் தொழிலாளர்கள், ஒலி முழக்கம் செய்வதை நிறுத்தவில்லை.

மந்திரி லால்பகதூர் சாஸ்திரி பேசுகையில், தொழிலாளர்களின் இந்தப் போக்கு தனக்குப் பிடிக்கவில்லை என்றும், தான் ஏற்கனவே அந்தத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளை மறுநாள் சந்திக்க சம்மதம் தந்திருப்பதாயும், அவர்களின் குறைகளை அறிய ஆவல் கொண்டிருப்பதாயும் தெரிவித்தார்.

அத்துடன், வழக்கமாக மந்திரிகள் பேசுவதைப்போல, 'தொழிலாளர்கள் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொண்டால்தான் சர்க்கார் திட்டம் எந்த ஒரு திட்டமும் நிறைவேற முடியும்' என்றும் தெரிவித்திருக்கிறார்.

'தொழிலாளர்கள் ஒத்துழைப்பின்றி எந்த ஒரு திட்டமும் வெற்றிகரமாக நிறைவேற முடியாது' என்றும் அவர் தெரிவித்தாராம்.

எதிர்க் கட்சி அமைகிறது!

லாகூர், அக். 19—

மேற்கு பாகிஸ்தான் ஒருறுப்பு மாகாணத்தை எதிர்க்கும் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, அகில பாகிஸ்தான் எதிர்க்கட்சியை அமைக்கக்கூடுமாம். கான் அப்துல் கபார்கான் உள்ளிட்ட எதிர்ப்புத் தலைவர்கள், இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனராம்.

பண்டிதரின் வேண்டுகோள் காற்றில் பறக்கிறது!

மத்திய பாரத் காங்கிரசார் கிளர்ச்சியில் ஈடுபடுவர்?

இந்தூர், அக். 18—

மத்திய பாரத் மாநிலத்தை—மராத்தி மாவட்டங்கள் நீக்கப்பட்ட மத்தியப் பிரதேச மாநிலத்துடன் இணைப்பதற்குக் காங்கிரசாரிலேயே பலர் பலத்த எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர்.

அவர்கள் மத்திய இந்தியாவில், மத்திய பாரத் மாநிலம் இப்போதிருப்பதைப்போலவே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும், அதனுடன் பூகோளத் தொடர்புடைய அண்மையிலிருக்கும் போபால் போன்ற பகுதிகளையும் இணைத்து ஒரு தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்றும் கோருகின்றனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—10—'55 வியாழன்

இலங்கையில் தமிழ்!

'இலங்கையில் ஆட்சி மொழியாக—தேசிய மொழியாக, சிங்களத்தைப் போலவே தமிழ் மொழியும் இருக்க வேண்டும்' என்ற இலங்கைவாழ் தமிழர்களின் நியாயமான கோரிக்கையை ஒட்டிப் புகைச்சலும்-பூசலும் கடந்த சில நாட்களாக அந்தச் சின்னஞ் சிறு தீவில் நிலவி வருகின்றன.

தமிழ் மொழிக்கும் சிங்கள மொழியைப் போலவே, அரசியல் சட்ட ரீதியான சம 'அந்தஸ்து' வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துவதற்காக, கடந்த கிழமையில் கொழும்பு நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், 'புத்த சன்னியாசிகள்' எனப்படுவோர் செய்த 'கிளர்ச்சி'யை ஒட்டி, நகரில் உள்ள தமிழர்கள் பலர் தாக்கப்பட்டு, தமிழர் கடைகள் பல கொள்ளையிடப்பட்ட—வருந்தத்தக்க குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் அதே கொள்கையை வலியுறுத்துவதற்காக, வேறொரு கட்சியினர் கொழும்பு நகரில் கூட்டம் கூட்டியபோதும், முன்போலவே 'கலகம்' விளைவித்திருக்கின்றனர், சிலர்.

இலங்கையில் வதியும் சுமார் 10 இலட்சம் தமிழர்களில் கணிசமான பேர்களை அங்கிருந்து துரத்திவிடுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் கொத்தலாவலை சர்க்கார், தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப் போல அரசியல் சட்ட ரீதியாக ஆட்சி மொழியாக இடம் தருவதில் நியாயத்துடன் நடந்து கொள்ளும் என்று திடமாகச் சொல்லுவதற்கு முடியவில்லை; ஏனெனில், அவர் நேற்று முன்தினம் நடைபெற்ற தனது கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களிடத்தில் பேசுகையில், 'தமிழ் மொழி தொடர்ந்து அலுவல் மொழியாக நீடிக்கச் செய்ய வேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கை; ஆனால், தமிழ் மொழிக்கு சட்ட ரீதியான இடம் தருவதற்காக, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கூறப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது' என்று தெரிவித்திருப்பதாக, இலங்கை நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார்.

'அலுவல் மொழியாக தமிழ் தொடர்ந்து நீடிக்கும்; ஆட்சியினர், தமிழ் மொழியிலேயே வருங்காலத்திலும் அலுவல்களை நடத்த ஒப்புவர்' என்பது உண்மையானால், 'அந்த நடைமுறையை சட்டத்தின்மூலம் உறுதி செய்வதில் தவறென்ன?'—என்பதை, பிரதமர் கொத்தலாவலை விளக்க வேண்டும்.

'தமிழ் மொழி, எதிர்காலத்திலும் அலுவல் மொழியாக இயங்கும்—இயங்கச் செய்வோம்—என்று கொத்தலாவலை இருதயசுத்தியோடு கூறுவதானால், தமிழ் மொழியை சிங்களத்தைப் போன்ற அந்தஸ்து உடையதா என்று சட்டம் செய்வதற்குத் தயங்குவானேன்?'—என்று, இலங்கைத் தமிழரில் ஒருபகுதியினர் கேட்கின்றனர்.

ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுவதற்காக எதிர்க் கட்சியினர் கையாளும் தந்திரம்தான், 'தமிழ் மொழிக்கு சட்ட ரீதியான இடம் தேவை என்று கோருவது' என்பதாகக் கொத்தலாவலை கூறும் காரணம் ஆட்சிப்பீடத்தில் அமரும் எல்லோருமே, பொதுவில், எதிர்க் கட்சியினர்மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களைப் போல ஒன்றுதான்—என்றே இலங்கைத் தமிழர் கருதுவர்.

சிங்களவரைத் தவிர, இலங்கையில் தமிழர்களே இல்லாது செய்துவிட வேண்டும்—என்ற வெறி கொண்ட சிங்களவர் சிலரின் கூக்குரலுக்கும், வீண் ஆர்ப்பாட்டங்களுக்கும் அஞ்சியேதான், கொத்தலாவலை சர்க்கார், தமிழ் மொழிக்கு அரசியல் சட்டரீதியான பாதுகாப்புத் தர மறுக்கின்றது—வேறு நியாயமான காரணங்களுக்காக அல்ல — என்று, இலங்கைத் தமிழர் இயக்கத் தலைவர்கள் சிலர் கருதுவது, தவறுடையது எனக் கொள்வதற்கில்லை.

சிங்களப் பெருமக்களும், கொத்தலாவலை சர்க்கார் துரத்தியது போக—துரத்தத் திட்டமிட்டுள்ளது போக, எஞ்சும் தமிழர்களின் எதிர்காலம் பற்றி எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

தமிழ் மொழி தங்களது சிங்கள மொழியைப் போல சம நிலை பெறுவதால், தங்கள் வாழ்வுக்கும்—செல்வாக்கிற்கும் எந்தவிதக் குந்தகமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதையும் சிங்களப் பெருமக்கள் உணரவேண்டுவது அவசியம்.

இலங்கை தி. மு. கழகத்தவர் 'சிங்களம்—தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக ஆக்கப்படவேண்டும்' என்று கோரி, அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

இந்தக் கோரிக்கைக்காக, மக்கள் சபையில் டாக்டர் பெரிரா கொண்டுவந்துள்ள தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெறும். அதன் முடிவு யூகிக்கக்கூடியதுதான் என்றாலும், பொறுத்திருந்து பார்ப்போம்.

அந்த முடிவுக்குப்பின் ஏற்படும் விளைவுகளுக்கு, கொத்தலாவலை சர்க்காரின் வழக்கமான, அதிருப்தி நிறைந்த போக்கே பொறுப்பாக இருக்க முடியும்.

முயற்சிக்கின்றனர்!

இலட்சுமணபுரி, அக். 18—

அடுத்த வருடம் செப்டம்பர் 7-ந் தேதியன்று, செவ்வாய்க் கிரகம் பூமிக்கு நேர் எதிரே வரும் பொழுது அதை ஆராய்வதற்கு உத்தரப்பிரதேச சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்

நைனிடாலில் உள்ள மஜோரா கேந்திரத்திலிருந்து ஆராய்ச்சி நடத்தப்படும். செவ்வாய் கிரகத்தின் மேல் பரப்பு பற்றியும் வானிலை பற்றியும் பல அரிய தகவல்கள் இந்த ஆராய்ச்சியிலிருந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மொழிச் சிக்கல்

கொத்தலாவலையின் கொள்கை?

கொழும்பு, அக். 18—

'சிங்கள மொழியைப்போலவே தமிழ் மொழிக்கும் அரசியல் சட்ட ரீதியான சம அந்தஸ்து வேண்டும்,' என்ற, டாக்டர் என். எம். பெரிரா கொண்டு வந்துள்ள தீர்மானம், இலங்கை மக்கள் சபையில் விவாதத்திற்கு வந்துள்ளது.

அதற்கிடையில், ஆளும் கட்சியினரின் கூட்டம் ஒன்றில், மிக முக்கியமான பிரச்சினையாக விளங்கும் இந்த மொழிச் சிக்கல் குறித்து விவாதிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் அலுவல் மொழியாக தமிழ், சிங்களம் இரண்டும் தொடர்ந்து நீடித்து இருக்க வேண்டும் என்பதே பிரதமரின் கொள்கையாம்; ஆனாலும், 'தமிழுக்கு சட்டரீதியாக சம அந்தஸ்து தருவதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்பதை, தான் ஏற்றுக்கொள்ள இயலாதெனக் கருதுகிறாராம்.

"அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கோருவது, பதவியில் அமர விரும்பும் எதிர்க் கட்சியினரின் 'ஸ்டன்ட்' வேலை" என்றும் அவர் கூறுகிறாராம்!

இதற்கிடையில், புத்த சன்னியாசிகள் பலர் மக்கள் சபை மீது 'படையெடுத்து, பிரதமரிடம், 'சிங்களத்தை மட்டும் அலுவல் மொழியாக்க வேண்டும்' என்று கோரும் மனு ஒன்றைத் தாக்கல் செய்யப் போகின்றனர் என்றும் தெரிய வருகிறது.

இதனை ஒட்டி, போலீசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தவண்ணமிருக்கின்றனராம் மக்கள் சபையைச் சுற்றிலும் ஆயுதம் தரித்த போலீசார் காவல் நிற்பர் என்றும் கூறப்படுகிறது

செஞ்சீனு — இலங்கை வர்த்தக ஒப்பந்தம்

சீனாவும், இலங்கையும் புதியதொரு ரப்பர்—அரிசி ஒப்பந்தம் மேற்கொண்டிருக்கிறதாம்.

சீனப் பிரதிநிதிகளும், இலங்கை வர்த்தகத் தூதுக் குழுவினரும், 1955 ஜூன் 30-ந் தேதி முதல் டிசம்பர் 31-ந் தேதிவரை ரப்பர் விலையை மாற்றி அமைப்பது குறித்த ஒப்பந்தம் ஒன்றின் குறிப்புகளைப் பரிமாறிக்கொண்டனராம்.

புதிய ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து சீனா 50,000 மெட்ரிக் டன் ரப்பர் வாங்கும் என்றும், இலங்கை சீனாவிலிருந்து 2,00,000 மெட்ரிக் டன் அரிசி வாங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியக் கம்பெனிச் சட்டக் குற்றங்கள்

11 கம்பெனிகளுக்கும், 32 அதிகாரிகளுக்கும் அபராதம்

நடப்பு நிதி ஆண்டில், முதல் 6 மாத காலத்தில், சென்னை மாநிலத்தில் 11 கம்பெனிகளும், அக் கம்பெனி அதிகாரிகளான 32 பேர் பேர்களும் இந்திய கம்பெனிச் சட்ட பிரிவுகள் சம்பந்தமான குற்றங்கள் செய்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆர். கே. சுகுமாரன்

மேல் நாடுகளுக்குச் செல்லுகிறார்

சென்னை நகரப் போக்குவரத்து உதவி போலீஸ் கமிஷனர் ஆர். கே. சுகுமாரன், விரைவில் இங்கிலாந்துக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லக்கூடும். அந்த நாடுகளில் மோட்டார் போக்குவரத்து, நிர்வாக முறைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை அவர் அறிந்து வருவார்.

சென்னை நகரத்தில் மோட்டார் விபத்துக்கள் அதிகரித்து வருவது பற்றி சர்க்கார் அதிகக் கவலை கொண்டுள்ளனர்.

அகதிகளுக்கு ரொக்க நஷ்டஈடு

இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, அக் 18—

இடம் பெயர்ந்தோரின் வாரிசுகளுக்குக் கூட நஷ்டஈடு தருவது என்று, இந்தியப் பேரரசின் அகதி புனரமைப்பு இலாகா முடிவு செய்திருக்கிறதாம்

ரொக்கமாகத் தரப்படும் இந்த நஷ்டஈடு, குடும்பத்தை நடத்துவதற்காகப் 'படி' பெற்றுக்கொண்டிருந்த இடம்பெயர்ந்த மக்களில், நஷ்டஈடு கோரி மனுச் செய்திருந்தால்தான் தரப்படும் என்ற நிபந்தனை மட்டும் விதிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

குடும்பம் நடத்த தரப்பட்டு வந்த 'படி' இப்போது நிறுத்தப்பட்டிருந்தாலும், நஷ்டஈடு கோரிய காலத்தில் குடும்பம் 'படி' பெற்றுக்கொண்டிருந்தால் அவர்களுக்கும் ரொக்க நஷ்ட ஈடு தரப்படும்; அதைப் போலவே, விதவைகள், கைகால் ஊனமானவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளுக்கும் இந்த நஷ்டஈடு தரப்படும் என்றும் சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

★

அகதிகள் எண்ணிக்கை

திங்கள்தோறும் 22,000 பேர் ஓடிவருகின்றனராம்

சென்ற ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் பாகிஸ்தானை விட்டு வெளியேறிய அகதிகளின் எண்ணிக்கை 56,000 ஆக இருந்தது-இந்த ஆண்டு அதே கால அளவிற்கு, 1,76,000 ஆக உயர்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இப்படி அகதிகளின் எண்ணிக்கை அதிகமாவதற்குக் காரணம், மேற்கு வங்கத்தில் நடைபெறவிருக்கும் 'பூஜை விழா'தான் என்று கிழக்கு வங்க முதன் மந்திரி அபு உசேன் சர்க்கார் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கணக்குப்படி, திங்கள் தோறும் 22,000 பேர் சராசரியாக கிழக்கு வங்கத்திலிருந்து இந்தியாவிற்கு ஓடிவந்து கொண்டிருக்கின்றனர் என்றும், இதுவன்றியில் திருட்டுத்தனமாக வேறு, வெளியேறி ஓடி வருகின்றனர் என்றும் தெரிய வருகிறது.

உணர்ந்தபின் கூறுகிறார்!

"இன்ஷ்யூரன்சின் பலனை பணக்காரர்கள் மட்டுமே பெறாமல், மத்தியதர வகுப்பினரும், ஏழைகளும் பெறும்படி செய்ய வேண்டும்; நாம் ஏழைகளுக்கு 'விடிவு' ஏற்படச் செய்தால்தான், நமக்கு 'விடிவு' ஏற்படுத்திக் கொண்டவர்களாவோம்"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா, 'இன்ஷ்யூரன்ஸ் கிளப்' தமக்கு அளித்த வரவேற்பில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"காலத்தின் சவாலை எதிர்த்து நிற்கவேண்டுமானால், நீங்கள் மேற்கொண்டு ஒரு படி முன்னே சென்று ஏழை மக்களுக்கு உங்களால் என்ன செய்ய முடியும் என்பதுபற்றி சிந்திக்க வேண்டும்; ஏழை மக்களை, இன்ஷ்யூரன்சின் அனுகூலத்தைப் பெறுவதற்கு எவ்விதம் முன்வரச் செய்வது என்பதைக் கண்டுபிடிக்க உங்கள் அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தவேண்டும்; இதைச் செய்யாவிட்டால் நீங்கள் சமூகத்துக்கு நன்கு சேவை செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை."

இந்திய சர்க்கார், நிக்கல் நாணயங்களை அச்சடிப்பதற்காக, 1947-லிருந்து 1952-ம் ஆண்டு வரை சுமார் ரூ 3,74,00,000 பெறுமான முன்ன 4,460 55 டன் சுத்த நிக்கல் உலோகத்தை வாங்கினர்; 1952-ஆண்டுக்குப் பிறகு, நிக்கல் உலோகம் எதுவும் வாங்கப்படவில்லை.

லோகியா கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

சென்னை, அக். 18—

டாக்டர் லோகியாவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய சோஷலிஸ்டு கட்சியினரின் 'கோரிக்கை தின' நடவடிக்கையை ஒட்டி, தொழிலாளர்களின் ஊர்வலமொன்று திரு எஸ். பக்கிரிசாமி எம்.எல்.ஏ., தலைமையில், பெரம்பூரிலிருந்து புறப்பட்டு, கோட்டைக்கு எதிரிலுள்ள கடற்கரையை வந்தடைந்தது.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், சிக்கனச் சீரமைப்பு என்ற காரணத்துக்காக தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரியும், நில உடைமைக்கு அதிகபட்ச வரம்பு, நியாயமான வாரம், விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயித்து விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டத்தை விரைவில் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், தோழர்கள் எஸ். பக்கிரிசாமி எம் எல் ஏ., முராஹரி, ஏ. ஆர் இந்திராபதி, ஏ. முருகேசன ஆகியோர் தலைமையில், ஒரு தூதுக் குழு முதலமைச்சர் காமராசரைச் சந்தித்து, தீர்மானங்களின் பிரதியைத் தந்தனர்.

சென்னை உற்பத்திமீது மத்திய ஆட்சியினர் பார்வை

என்ன காரணமோ?

சென்னை, அக். 18—

சென்னை மாநிலத்தில் தயாரிக்கப்படும் கதருக்கு, மத்திய ஆட்சியினரிடமிருந்து, 'கிராக்கி'கள் அதிகரித்திருப்பதையொட்டி, சென்னை மாநிலத்தில், கதர் உற்பத்திக்குப் புதியதோர் ஊக்கம் தரப்பட்டிருக்கிறதாம்!

இம்மாநிலத்தில், விசேட ரகக் கதர் தயாரிக்கப்படுகிறதாம்; இங்கு வாங்கும் கதரை, இரயில்வே, தபால் இலாகா ஊழியர்களின் 'யூனிபாரம்' உடைகளுக்கு, மத்திய ஆட்சியினர் உபயோகிப்பராம்.

சமூக நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழும், மற்ற கிராம அபிவிருத்தித் திட்டங்களின் கீழும், வருகிற எல்லா கிராமங்களிலும் இராட்டை மூலம் தீவிர நூற்பு இயக்கம் ஆரம்பிப்பதற்குச் சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறது இதற்காக 120 'ஆர்கனைசர்'கள் நியமிக்கப்படுவர்.

ரூ. 300 கோடியில் குடிசைத் தொழில் அபிவிருத்தி

போப்பால், அக். 18—

குடிசைத் தொழில் அபிவிருத்திக்காக 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 200 கோடியிலிருந்து ரூ 300 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

கோடிக்கணக்கான வேலையற்றவர்களுக்கு வேலை கொடுப்பது கனரகத் தொழில்களால் சாத்தியமல்லவென்றும், குடிசைத் தொழில் அதற்கு மிகவும் அவசியமென்றும், மத்திய உதவி உற்பத்தி மந்திரி கூறியுள்ளார்.

ஜான்சி இராணியின் பேரனுக்கு 'பென்ஷன்'

இலட்சுமணபுரி—

1857-ம் ஆண்டில் நடைபெற்ற இந்திய சுதந்திரக் கிளர்ச்சியில் ஈடுபட்ட வீராங்கனை ஜான்சி இராணி இலட்சுமி பாயின் பேரன் பெற்றுவரும் மாதாந்திர அரசாங்கப் 'பென்ஷன்,' விரைவில் உயரக் கூடும்; தற்போது அவருக்கு சர்க்கார், ரூ. 50 அளித்து வருகிறது.

இதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்துவருவதாக உத்திரப் பிரதேச சட்ட சபையில், முதன் மந்திரி தகவல் வெளியிட்டார்.

கழகச் செய்திகள்

சங்கரநயினர்கோயில் தி. மு. கழகம்

நாட்டுப் பிரிவினை விழா

2—10—55 இரவு 8 மணிக்கு, சங்கரநயினர் கோயில் நகர தி. மு. கழகச் சார்பில், காந்தி திடலில், தோழர் டி. ஆர். சுப்ரமணியம் தலைமையில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா பழனிவேலு, சு பழனியப்பன், ஆ. திராவிடமணி ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஈ வெ.கி. சம்பத் அவர்கள், திராவிட நாடு பிரிவினை அவசியம்—கடந்த 6 ஆண்டுகளில் தி.மு.கழகம் ஆற்றிய பணி—ஆவடி 'மாதிரி சோஷலிச'த் தீர்மானம் இழைக்கும் துரோகம் ஆகியவை குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினர். இறுதியில், நாட்டுப் பிரிவினைத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆமதாபாத்—சமால்பூர் தி. மு. கழகம்

2—10—55 மாலை 4½ மணிக்கு, ஆட்டாவாலாசால் பாண்டியன் இல்லத்தில், தோழர் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், சமால்பூர் வட்டக் கிளை வரவு—செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டதுடன், மணிநகர் வட்டக் கிளையின் சார்பாக வெளியிடவிருக்கும் 'வளரும் வடக்கு—தேயும் தெற்கு' எனும் புத்தகத்தை ஆதரிப்பதுடன், அதனை விற்பனை செய்ய பூரண ஒத்துழைப்பு அளிப்பதெனவும், 25—9—55ல், நடைபெற்ற நாட்டுப் பிரிவினை விழா, முத்தமிழ் நாடக மன்றத்தாரால் நடத்தப்பட்ட நாடகம் ஆகியவை சிறப்புற நடைபெற உதவி செய்த நகர தி. மு கழகச் செயலாளர் தோழர் ஆர். டி அசலம் அவர்களையும், முத்தமிழ் நாடக மன்றத்தாரையும் பாராட்டியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மல்லூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

8—10—55 மாலை, சேலம் மாவட்டம் மல்லூர் தி. மு. கிளைக் கழகச் சார்பில், தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ப. கண்ணன், சிற்றுளி சுப்பிரமணியம், என். வி சகாயம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

சென்னையில் தி.மு. கழகப் பொதுக்கூட்டம்

9—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை 46-வது வட்டம் ஆள்வார் பேட்டை — பீயண்ணன்பேட்டையில் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தலைமையில் நடைபெற்றது தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின், 'மக்களாட்சி' என்ற சொற்பொழிவு ஒலி பரப்பப்பட்டது. மற்றும் தோழர்கள் சி பி. சிற்றரசு, ஆர். டி. அரசு ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 23-வது வட்ட தி. மு. கழகம்

9—10—55 காலை 11 மணிக்கு, கழக அறையில் தோழர் ஜே. எஸ் மணி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், கிளைக் கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடத்தவும், அதற்குத் தேவையான பணத்திற்காக நிதி வசூல் செய்வதென்றும். தோழர் டி. எம் வி. இராசனை செயற் குழு உறுப்பினராக ஏற்றுக்கொண்டும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை 44-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்

8—10—55 மாலை 6 மணிக்கு சென்னை 44-வது வட்டம் (மயிலாப்பூர்) தி. மு. கழகக் கிளைச் சார்பில், ராக்கியப்ப முதலி தெருவில், தோழர் பி. வீ. ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் இளம் பரிதி, ஆர். டி. அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், தோழர் நாஞ்சில் கி மனோகரன் திராவிட நாடு பிரிவினையின் அவசியம் குறித்து நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

நொச்சியூரில் தி. மு. கழக கிளை அமைப்பு

9—10—55ல் நொச்சியூர் தோழர் அ. நாகமுத்து கடையில், அவரது தலைமையில் கிளைக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ நாகமுத்து, ப. அண்ணாமலை, ப. ரத்தினம், வை பொன்னுசாமி ஆகியோரை முறையே செயலாளராகவும், துணைச் செயலாளராகவும், பொருளாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேச்சேரி தி. மு. கழகம்

11—10—55 இரவு 8 மணியளவில், கழகக் கட்டிடத்தில், தோழர் கே. கே மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், மாநில மாநாட்டிற்கு நிதி அனுப்புவதென்றும், விரைவில் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப் பட்டது. துவக்கத்தில், தோழர்கள், கோ. சி எழிலன், மா குட்டியப்பன், மு ப. சிவம், வை. ச. சிவம், சே வி. சித்தப்பன் ஆகியோர் கழகக் கொள்கைகள் குறித்தும், நாட்டுப் பிரிவினை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

நாகர்கோவில் நகர தி. மு. கழகம்

14—10—55 மாலை, தோழர் ஏ. ராமசாமி தலைமையில் நடைபெற்ற நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், நாகர்கோவிலுக்கு வர இருக்கிற அண்ணா அவர்களை நகர கிளைச் சார்பில் வரவேற்பதென்றும், அடுத்து நடைபெறவிருக்கும் நகராண்மைக் கழகத் தேர்தலில், சுயேச்சையாகப் போட்டியிடும் கழகத் தோழர்களுக்கு ஆதரவு தருவதெனவும், திராவிடர் திருநாளை, மாவட்டத்திலுள்ள கிளைகள் அனைத்தும் 10-நாட்கள் தொடர்ந்து நடத்தும்படி ஆணை பிறப்பிக்குமாறு மாவட்டக் கழகத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானிக்கப்பட்டது.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

15—10—55-ல், சிறுகளப்பூர் (திருச்சி மாவட்டம்) தி. மு கழக உறுப்பினர் கூட்டம் ஊராண்மைக் கழகப் பணிமனையில், தோழர் பி முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது தி மு. கழக 7-வது ஆண்டு விழா பொதுக்கூட்ட வரவு - செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில முடிவுகளும் செய்யப்பட்டன.

சேவூர் (வ. ஆ.) தி. மு. க.

16—10—55 பகல் 2 மணிக்கு, கழக நிலையத்தில், மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்கள் தலைமையில், சேவூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, மாவட்டச் செயலாளர் அவர்கள், பொதுச் செயலாளரின் வேண்டுகோளின்படி கிளையின் தேர்தலை நடத்திவைத்தார்.

செயலாளராக வி. இ. செயராமனும், துணைச் செயலாளராக கே. நடேசனும், பொருளாளராக எம். பி. சுப்பிரமணியமும், மாவட்டப் பிரதிநிதியாக கே. எம்.சாரங்கபாணியும், 15 பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அனுதாபம்

ஆரணி நகர தி மு க செயலாளர் தோழர் கே. பி. கண்ணன் அவர்கள் தந்தை பிரமானந்தம் அவர்கள் 8—10—55-ல் இயற்கையெய்தியமைக்கும், இராட்டிணமங்கலம் தி. மு கழகத் துணைச் செயலாளர் ஆர். கே. மாதவன் அவர்கள் மகன் முனுசாமி 18—9—55ல் இயற்கையெய்தியமைக்கும், சேவூர் தி மு கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அன்று சொன்னோம்—இன்று கூறுகிறார்!

"அணுயுகம் பற்றி உலக மக்கள் பேசிக்கொண்டிருக்கையில், இந்திய நாட்டு மக்கள் இன்னமும் 'பசும் சாண' யுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்; நான் உண்மையையே எடுத்துரைக்கிறேன்; இன்று கூட இந்தியாவில், பெரும்பாலும் பசுவின் சாணத்திலிருந்தே 'விசை சக்தி (எரிபொருள்—விறட்டியைத்தான் குறிப்பிடுகிறார்) பெறுகின்றனர்; உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம்—உண்மை என்னவோ இதுதான்; 'விசை சக்தி' மட்டிலுமல்ல — மனப்பான்மையிலும், நாம் இன்னும் 'பசும் சாண' யுகத்திலேயே வாழ்கிறோம்,"

என்று, பண்டித நேரு, கல்கத்தாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

★

"சாதி மனப்பான்மை எங்கு காணப்பட்டாலும், அங்கெல்லாம் அதனை எதிர்த்து ஒழித்துக் கட்டப்படும்; சாதி மனப்பான்மையை இனி சகித்துக் கொண்டிருக்க முடியாது; அதனை நான் தகர்த்தெறிவேன்—உடைத்தெறிவேன்; இந்த வேற்றுமையை ஒழிக்காவிட்டால், நாடே அழிந்துவிடும்"

என்று, தலைமை அமைச்சர் நேரு, கயாவில் கூறியுள்ளார்.

★

"பொருளாதாரச் சுதந்திரமில்லாவிட்டால் இந்தியாவில், அரசியல் சுதந்திரம் பயனில்லை; ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் பல நாடுகள் அரசியல் ரீதியாகச் சுதந்திரமாக இருப்பினும், பொருளாதாரத் துறையில் அவைகள் மற்ற நாடுகளைச் சார்ந்திருப்பதால் அந்நிய நாடுகளின் செல்வாக்கு அந்தத் தேசங்களின் அரசியல் காரியங்களிலும் பரவுகிறது; அது, உண்மையான சுதந்திரமன்று; துரதிருஷ்டவசமாக, பல இயந்திரக் கருவிகளை அயல் நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமையிலிருக்கிறோம்; அந்தக் கருவிகளைத் தயாரிப்பதற்கான இயந்திரங்களை இங்கு ஏற்படுத்துவது நம்முடைய முதலாவதான கடமையாகும்,"

என்று, கல்கத்தா மாணவர்கள் கூட்டமொன்றில், பிரதமர் நேரு குறிப்பிட்டார்.

★

"அணைத் திட்டங்களும், பெரிய வேலைத் திட்டங்களும் முடிவடைந்த நாட்களெல்லாம் குறிப்பேடு (காலண்டர்)களில் குறிப்பிடப்பட வேண்டும்; பூசை நாள், ஹோலி பண்டிகை, அமாவாசை போன்ற நாட்களைக் குறிப்பதைப் போலவே, இந்த மகத்தான சாதனைகள் முடிவடைந்த நாட்களும் குறிக்கப்பட வேண்டும்,"

என்று, பிரதமர் நேரு, கோனார் அணைக்கட்டுத் திட்டத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

ரூ. 10 கோடி செலவில் வடநாட்டில் உருவான அணைக்கட்டுத் திட்டம்

நிர்மாணத் துறையில் ஒரு கண்னோட்டம்

பீகார் மாவட்டத்திலுள்ள ஹசாரிபாக் மலைகளுக்கிடையே ரூ. 10 கோடி செலவில் கட்டப்பட்டுவந்த கோனார் நதி அணை பூர்த்தியாகிவிட்டது. கோனார் நதி, தாமோதர் நதியுடன் கலக்குமிடத்திற்கு மேற்புறத்தில் 23 மைல் தூரத்தில், கோனார்மீது இந்த அணை கட்டப்பட்டிருக்கிறது; தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின் முதற் கட்டத்தில் சேர்க்கப்பட்ட 4 அணைகளில் இது இரண்டாவதாகும்.

இது காங்கிரீட்டில் கட்டப்பட்ட கதவுகளுடன் கூடிய மத்திய நீர் வடிகால் கொண்டதும், பக்கங்களில் மண் கரைகள் போடப்பட்டதுமான கட்டுக்கோப்பான அணை அமைப்பு.

கீழ்ப்பள்ளத்தாக்குப் பகுதிகளுக்கு நிரந்தரமாக நீர்ப்பாசனம் கொடுக்கக்கூடியது; இந்த நீர்த் தேக்கத்தின் மூலம் நீர் விசைச் சக்தி உற்பத்தியும் செய்யலாம்; மேலும், பொக்காரோவிலுள்ள 'தெர்மல் மின்சார உற்பத்தி நிலயத்'துக்கு, இது விநாடி ஒன்றுக்கு 400 கன அடி தண்ணீர் வீதம் விநியோகமும் செய்யுமாம்.

இந்த அணைத் திட்டத்தை, 15-ந் தேதியன்று, பிரதமர் நேரு திறந்து ஆரம்பித்து வைத்தார்.

அணையின் நோக்கம்

கோனார் அணை கட்டப்பட்டதின் முக்கிய நோக்கம் — பொக்காரோ 'தெர்மல் மின்சார உற்பத்தி நிலைய'த்துக்கு குளிர்ந்த நீர் விநியோகம் செய்வதுதான். இதற்காக, கோனார் நீர்த் தேக்கம் 2,60,000 ஏக்கர் அடி சக்தி கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டது; இதில் 2,10,000 ஏக்கர் அடி தண்ணீர் தாராளமாகத் தங்கக் கூடும்.

இந்த அணை காங்கிரீட், மண் இரண்டாலும் கட்டப்பட்டிருக்கிறது. ஆற்றுப்படுகையில், காங்கிரீட் நீர் வடிமதகுகொண்ட மண் அணையாக இது மாற்றப்பட்டது.

மண் அணையின் மொத்த நீளம் 11,170 அடி; இது, இடது முக்கிய அணை, வலது முக்கிய அணை, தரை அணைகள் இரண்டு - ஆக மொத்தம் தனித்தனியாக நான்கு அணைகள் கொண்டது.

காங்கிரீட் நீர் வடிகால் அமைப்பு ஆற்றுப்படுகையிலிருந்து 160 அடி உயரமுள்ளது; இதன் நீளம் மொத்தம் 910 அடி; விநாடிக்கு 2,40,000 கன அடி தண்ணீர் வெளிவருவதற்கு ஏற்ற வகையில் இது நிர்மாணிக்கப்பட்டது. இந்த அளவு தண்ணீர் ஓடுவதற்காக, உச்சி வரிசைக் கதவுகள் ஒன்பது—ஒவ்வொன்றும் 30 அடி உயரமும், 34 அடி அகலமும் கொண்டவை—பொறுத்தப்பட்டுள்ளன.

அணையின் காங்கிரீட்பகுதி, ஒன்பது நீர் வடிப் பிரிவுகள், உள்ளிழுப்புப்பிரிவு ஒன்று, பக்கவாட்டு ஆதாரப்பிரிவுகள் பத்தும்கொண்ட 'ஆகர்ஷண அணை'யாக உருவகப் படுத்தப்பட்டது. மண்கரை, வெள்ளத்தால் அரிக்கப்படாதபடி பாதுகாப்பதற்காகக் கீழ்ப்புறம் 50 அடி உயரச் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

'பாதாள மின்சார நிலையம்' விரைவில் ஏற்படுமாம்!

40,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய 'பாதாள மின்சார நிலையம்' ஒன்றை நிர்மாணிக்கக்கூடும் என்றும், அந்த நிலையம், அணைக்கு 500 அடி கீழே, தண்ணீர் மறுபடியும் ஆற்றுப்படுகையில் போய்ச்சேரும் வகையில் ஏழு மைல் நீளமுள்ள குடைபாதை கொண்டதாக அமைக்கப்படும் என்றும், இந்த வேலை விரைவிலேயே தொடங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது

அணைக்கட்டு வேலை

கோனார் அணை கட்டும் வேலை 1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமாகியது. இப்பிரதேசம் வெறும் காட்டுப் பிரதேசமாம் இருந்ததால், முதன் முதலில் அங்கு காடு அழித்தல், போக்குவரத்து வசதிகளுக்கு வழி செய்தல், முகாம்கள் அமைத்தல், இது போன்ற முன்னேற்பாடு வேலைகள்தான் நடைபெற்றன. மண் அணை வேலை, 1950-ம் ஆண்டு கடைசி இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

மண் அணை அமைப்பு வேலை 1951—52-ம் ஆண்டு வேலைப் பருவத்தில் உச்சநிலையை அடைந்தது. பின்னர் அவ்வேலை 1954-ம் ஆண்டில் பூர்த்தியடைந்தது.

காங்கிரீட் 'ஸ்பில்வே' (நீர்வடி மதகு) கட்டுவதற்காக மண் தோண்டும் வேலை 1950-ம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது. காங்கிரீட் வேலை 1951-ம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. பக்கவாட்டு ஆதாரங்களில் வேலைகளும் நடந்துவந்தன.

1952-ம் ஆண்டு மே மாதம்-அதாவது மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னரே, அணையின் அடிப்படை பூராவும் காங்கிரீட் போடப்பட்டு விட்டது;

கலவை காங்கிரீட் தயாரிப்பு இயந்திரம் 1952-ல் நிர்மாணிக்கப் பட்டது. இது நாளொன்றுக்கு 1,200 கனகெஜம் காங்கிரீட் தயாரிக்கக்கூடியது; இதன் உச்ச அளவு உற்பத்தி 1952-ம் ஆண்டு அக்டோபர் மாதந்தான் அடைய முடிந்தது. காங்கிரீட்டைப் போடுவதற்கும் பலவித 'கிரேன்'கள், கருவிகள் முதலியன உபயோகிக்கப்பட்டன.

1953-ம் ஆண்டில் வெள்ளம் அதிகமாக இருந்தது விநாடிக்கு 55,000 கன அடி வேக வெள்ளம் தான் உச்சமானது; 50,000 கன அடி வெள்ளம் ஒன்று இதே ஆண்டு ஏற்பட்டது. இதர வேலைகளான வடிநீர்ப் பாலம் கட்டுதல், அலைதாங்கிகள் அமைத்தல் போன்ற காரியங்கள் 1954 செப்டம்பரில் பூர்த்தியாயின. வரிசை உச்சிக் கதவுகள் 1955 முன் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டன. இதர உருக்குக் கட்டுமானங்களும் முன்பே நடந்துவிட்டன.

கிராமவாசிகள் கண்விழிப்பு!

ஜார்ஜ் ஆலன் 'படப்பிடிப்பு'

இந்தியாவின் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஜார்ஜ் வி. ஆலன், ஆக்ஸ்போர்டில் (ஓகியோ) பெண்களுக்கான பட்டமளிப்பு விழா ஒன்றின்போது பேசுகையில் சொன்னர்:—

"இந்தியாவின் கிராமப்புற மக்கள், சிறந்த வாழ்க்கை நலன்களைக் கோருவது, மிக முக்கியமான சம்பவமாகும். இந்தியாவின் மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தினராக உள்ள அவர்கள், 5,000 ஆண்டுகளாகத் தூங்கிக்கொண்டிருந்தனர்; ஆனல், அவர்கள் இப்பொழுது விழித்தெழுந்து, சிறந்த நலன்களை விரும்பத் துவங்கிவிட்டனர்.

'எங்களுடைய தந்தையர் வாழ்ந்த அந்த நிலைமைகளின் கீழ் நாங்கள் இனி வாழப்போவதில்லை!' என்று அவர்கள் குரலெழுப்புகின்றனர்; அவர்கள் விரும்புவதைப் பெறுவதில், அது ஆபத்தானதே யாகும்; துரிதமான செயலுக்கு உறுதிகூறும் எவருடைய பேச்சையாவது அவர்கள் கேட்டுத்தான் தீருவர்."

ஊழியர் நல அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ், இப்பொழுது மொத்தம் சுமார் 9,42,000 சிப்பந்திகள் பயன் பெற்று வருகின்றனர்.

பதுக்கிவைத்து கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்கு இனி இடமில்லையாம்!

மில்துணியை விற்பதற்கு இனிமேல் 'லைசென்சு' முறை நீடிக்காது

சென்னை, அக். 20—

"மில்துணி உற்பத்தி உச்ச நிலையை அடைந்துள்ளது; கைத்தறித் துணியும் ஏராளமாகக் குவிந்து கிடக்கிறது; இனி, பதுக்கிவைத்து, கொள்ளை இலாபம் சம்பாதிக்க வேண்டுமென்றிருந்த ஆர்வமும், தெம்பும் மறைந்தவிட்டதென்றே சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது; எனவே, மில் துணியை விற்பதற்கான லைசென்ஸ் முறையை நீடிக்கவேண்டிய அவசியமில்லை,"

—என்று, துணி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவை ரத்து செய்துவிட்டதாக அறிவித்துள்ள சர்க்கார் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூல் கட்டுப்பாடு உத்தரவு நீடிப்பு

'நூல் வியாபாரிகள் லைசென்சு வாங்க வேண்டும்' என்ற கட்டுப்பாடு உத்தரவு மட்டும் நீடித்து அமுலில் இருந்துவரும் என்று, சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

கழகக் கூட்டம்

★

ஆர்பூர்

முசமதலி திடலில்

21—10—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

என். வி. நடராசன்

பம்பாய் தி. மு. க. பொதுக் குழு உறுப்பினர்கட்கு

23-10-55 காலை 10 மணிக்கு, பம்பாய்-தாராவி, களக்காடு வட்டாரச் சங்க அறையில், பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

திரு-கொச்சி மந்திரி சபை மீண்டும் ஆடுகிறது!

சட்டசபையில் இரு தோல்விகள்

திருவனந்தபுரம், அக். 19—

திரு—கொச்சி மந்திரி சபைக்கு அடிக்கடி ஆட்டம் ஏற்படுவது வழக்கமாகிக்கொண்டிருக்கிறது.

இன்று, மந்திரி சபைக்கு, சட்ட சபையில் இரண்டு தோல்விகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த இரு தோல்விகளுக்குப் பிறகும், பதவியில் தொடர்ந்து நீடிப்பதா என்பதை மந்திரி சபையினர் இன்னும் முடிவு செய்யவில்லை என்று கூறப்படுகிறது.

கேரள சோஷலிஸ்டு கட்சி உறுப்பினரான டி. விவேகானந்தன், 'பஸ் போக்கு - வரத்தை தேசிய மயமாக்க வேண்டும் என்ற தனது மசோதாவை ஒரு பொறுக்குக் குழுவின் முடிவுக்குவிட வேண்டும் என்று தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

முதன் மந்திரி கோவிந்தமேனன் இதனை எதிர்த்தார்; சர்க்காரே இது போன்றதொரு மசோதாவை அடுத்த கூட்டத்தில் கொண்டு வரும் என்றும், மேலும், இந்திய சர்க்காரின் முன் அனுமதியின்றி தேசியமயமாக்கும் வேலையைச் செய்ய முடியாது என்பதால், எதிர்க் கட்சியினரின் மசோதாவால் பயனில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆனுல், வாக்கெடுப்பின்போது எதிர்க் கட்சியினருக்கு, சர்க்காருக்குக் கிடைத்ததைவிட இரண்டு வாக்குகள் அதிகம் கிடைத்ததால், சர்க்கார் தோல்வி கண்டனர்.

இரண்டாவதாக, இப்போது பகுதி நேரம் மட்டுமே பணியாற்றும் இந்தி ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக்குவதற்கான மசோதா ஒன்றை சர்க்கார் கொண்டு வந்தனர்; அதற்கு எதிர்க் கட்சியினர் ஒரு திருத்தம் கொண்டுவந்தபோதும் திருத்தம் இரு வாக்கு அதிகம் பெற்று நிறைவேற்றப்பட்டது; திருத்தத்தை எதிர்த்த மந்திரி சபையினர் தோற்றுவிட்டிருக்கின்றனர். பின்னர், திருத்தத்துடன், மசோதா இரு வாக்குகள் அதிகம் பெற்று நிறைவேறியிருக்கிறது.

முதல் தோல்வியின்போது முதன் மந்திரி பனம்பள்ளி, தனது மந்திரி சபையினர், நியமிக்கப்படும் பொறுக்குக் குழுவில் பணியாற்ற மாட்டார்கள் என்று கூறியபோது, ம. சோ. கட்சித் தலைவரான பட்டம் தாணுப்பிள்ளை, விதிகளின்படி, மந்திரிகள் பொறுக்குக் குழுவில் வேலை செய்ய மறுக்க முடியாதென்று குறிப்பிட்டார்.

2,000 தொழிலாளர்கள் போராட்டம்; 400 பேர் கைது!

திருச்சூரில் சம்பவம்; பலமான பாதுகாப்பு

திருச்சூர், அக். 19—

இங்கிருந்து 12 மைல் தொலைவில் உள்ள கண்டசங்கடவு என்ற கிராமத்தில் உள்ள தென்னை நார் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 2,000 தொழிலாளர்கள் ஒரு 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும், அவர்களில் 400 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

கடந்த மார்ச் திங்களில் நடைபெற்ற முக்கூட்டு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டபடி, குறைந்த பட்ச சம்பள நிர்ணயத்தை அமுல் செய்ய, நிர்வாகிகள் மறுத்துவருவதை ஒட்டி தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நிர்வாகிகள் ஒப்பந்தத்தை அமுல் செய்ய மறுப்பது மன்னியில், வெளியிலிருந்து வேறு தொழிலாளர்களைக் கொண்டுவந்து குவிப்பதாகவும் கூறப்படுகிறது.

கூலி நிர்ணயக் கழகத்தினர் நிர்ணயித்திருந்தபடி, தினம் ஒன்றுக்கு ரூ. 1—2—0 கூலிதர முதலில் நிர்வாகிகள் மறுத்தனர்; இப்போது தரப்படுவதைப்போன்று, எட்டணு முதல் பத்தணு வரை மட்டுமே தரசம்மதித்தனர்; ஆனுல், தொழிலாளர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக எச்சரித்த பின் ஒப்பந்தத்தை அமுல் செய்ய சம்மதித்து டிசம்பர் திங்கள் முதல் புதிய விகிதப்படி கூலி தருவதாகக் கூறினர்; ஆனுல், ஒப்பந்தத்தை இன்றுவரை அமுல் செய்ய மறுப்பது மட்டுமின்றி, வெளியிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவந்து வேலை செய்கின்றனர் என்று தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அதன் பின்னர்தான், தொழிலாளர் சிலர் மறியலில் ஈடுபட்டு, தாங்கள் வேலை செய்த இடங்களை பலவந்தமாகக் கைப்பற்றி வேலை செய்ய முற்பட்டனர்.

சட்டசபை உறுப்பினர்களில் சிலருங்கூட இந்த போராட்டத்தில் ஈடுபடுவதாகத் தெரிவித்திருக்கின்றனராம்.

ஊர் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கிறதாம்.

சென்னை மீனவர்களுக்கு

இயந்திரப் படகுகள்

இந்திய சர்க்கார் நிதி அளிக்கின்றனராம்

புதுடில்லி, அக். 17—

மீன் பிடிக்கும் தொழிலை இயந்திர மயமாக்குவதற்கு சென்னை மாநிலத்திற்கு இந்திய சர்க்கார் நிதி உதவி அளிக்கத் தீர்மானித்திருக்கிறது.

இந்தியாவிற்கு வந்துள்ள உலக உணவு விவசாய நிறுவனத்தின் நிபுணர் கூறியுள்ள 'மாதிரி'களின்படி 20 மீன் பிடிக்கும் படகுகள் கட்டப்படும். அவருடைய ஆலோசனையின் மீது 'மாதிரிப் படகு' ஒன்று கட்டப்பட்டு, சென்னையில், மீனவர்களுக்கு உபயோகித்துக் காட்டப்பட்டது. இதை உபயோகிப்பது சுலபமாக இருப்பதால் இப்படகுகளுக்குக் கிராக்கி அதிகமாக உள்ளது.

இந்த ஆண்டில் இதற்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 2,10,000. இதில் பாதித் தொகையை இந்திய சர்க்கார் கடனுக் கொடுப்பார்கள். இந்தப் படகுகளைக் குறைந்த விலையில் மீனவர்களுக்குச் சென்னை சர்க்கார் விற்பனை செய்வார்கள். இதற்காக மானியம் கொடுக்கவும் இந்திய சர்க்கார் சம்மதித்திருக்கின்றனர்.

அத்துமீறிய நடவடிக்கைகள் அல்லவாம்!

கோவாப் பகுதிகளிலுள்ள திட்டுக்கள்மீது பாகிஸ்தானுக்கு ஆவல் எதும் கிடையாதென்றும், கோவா சம்பந்தப்பட்ட வகையில் அத்துமீறிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லையென்றும் இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் கூறியுள்ளார்.

★

பாகிஸ்தானிலிருந்து கோவாவுக்கு அரிசி

கோவாவுக்கு அனுப்புவதற்காகப் பர்மா அரிசியை பாகிஸ்தான் வாங்கி வருவதாகவும், தொடர்ந்து பாகிஸ்தானிலிருந்து கோவாவுக்கு அரிசி வந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்த நிலைமையில், இந்தியாவின் பொருளாதார முற்றுகையைச் சமாளிப்பதற்குப் போர்ச்சுகீசிய சர்க்கார் வெகுவாக முயன்று வருகிறதாம்

ஒரிசா சட்டசபையில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல உறுப்பினர்கள் எழுந்து கூச்சல் போட்டிருக்கின்றனர். மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை ஒட்டிய விவாதத்தின்போது சபையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பினராம்!

தென் வியட்நாமில் அரசியல் நெருக்கடி

மன்னரின் உத்தரவை மதிக்க பிரதமர் மறுப்பு

சைகோன், அக். 19 —

தென் வியட்நாமில் பெரியதொரு அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பாரிசில் உள்ள தென் வியட்நாம் மன்னரான பாவோடாய் பிரதமரான நிகோ-தின்-தியேமை பதவியிலிருந்து விலங்கி உத்திரவு பிறப்பித்திருந்தாரல்லவா? ஆனுல், பிரதமர் தியெம், அந்த உத்திரவை மதிக்கப் போவதில்லை என்றும், அதனுல் பெரும் 'லடாய்' ஏற்படலாம் என்றும் தெரிகிறது.

இன்று தியெம், தனது சக மந்திரிகளுடன், பாவோடாயின் உத்தரவு குறித்து விவாதித்ததாயும் தெரியவருகிறது.

பாவோடாய் தொடர்ந்து மன்னராக இருக்க வேண்டுமா என்பதை நிர்ணயிப்பதற்காக, அடுத்த ஞாயிறன்று நாடெங்கும் நடைபெறவிருக்கும் வாக்கெடுப்பின் முடிவுகளுக்காகக் காத்திருக்கப் போவதாயும் தியெம் அறிவித்திருக்கிறார்.

★

'வாக்கெடுப்பு' என்பது 'ஜாலவித்தை'யாம்!

பாவோடாய் 'வர்ணனை!'

பாரிஸ், அக் 19—

"பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கு பிரதமர் தியெம் ஏற்பாடு செய்திருப்பது ஒரு 'ஜாலவித்தை' யாகும்" என்று மன்னர் பாவோடாய் வர்ணித்துள்ளார்.

"தின் தியெம், ஒரு சர்வாதிகாரியாக மாறுவதற்கு முயன்றதாலேயே அவரை 'டிஸ்மிஸ்' செய்தேன்; மக்களை பஞ்சத்திலும், போரிலும், நாசத்திலும் அழைத்துக்கொண்டு வந்துவிட்ட அவரிடம் இனி அதிகாரத்தை ஒப்படைக்க முடியாது," என்று, அவர், நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

வியட்நாம் இராணுவத்தினரிடையே ஆதரவு கிடைக்கக்கூடுமானுல், அவர் நாடு திரும்பக்கூடுமென்றும், இந்த வாரத்திலேயே புதிய சர்க்கார் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அவர் முயற்சிக்கக்கூடுமென்றும் நம்பப்படுகிறதாம்

கடலைப் பிண்ணாக்கில் உணவு தயாரிப்பு

கடலைப் பிண்ணாக்கை அடிப்படையாகக் கொண்டு, பலநோக்கு உணவு தயாரிப்பதற்காக மைசூரில் உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்திய பரிசோதனைகளில் வெற்றி ஏற்பட்டுள்ளது

இந்த உணவைத் தயாரிப்பதற்காக ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கான யோசனைகள் தற்போது பரிசீலனையில் இருக்கின்றன.

இந்த உணவை குழம்பாகச் செய்யலாம்; அல்லது, பிஸ்கெட்டுகளாகச் சாப்பிடலாம். தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தப் பலநோக்கு உணவு, அநேகமாக இலவசமாக வழங்கப்படலாம்.

பண்டிதர் வேண்டுகோள் காற்றில் பறக்கிறது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய பாரத் பிரதேசக் காங்கிரஸ் தலைவரும், மாநில மந்திரிகள் மூவரும் இன்று இங்கு வந்திருக்கின்றனர். அவர்கள் சட்டரீதியாக 'தனி மத்திய பாரத்' மாநிலம் வேண்டும் என்பதற்காகக் கிளர்ச்சியில் ஈடுபட எண்ணியிருப்பதாகவும், உள்ளூர் காங்கிரசாரில் பலர் அவர்களுக்கு ஆதரவு தருவரென்று நம்பப்படுவதாயும் கூறப்படுகிறது

பல மாவட்ட காங்கிரஸ் தலைவர்களும், 'மத்திய பாரத், மத்திய பிரதேசத்துடன் இணைய வேண்டும்' என்ற மாநிலக் குழுவின் சிபாரிசுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர்.

தந்திகள் மூலம் தாங்கள் கிளர்ச்சியில் ஈடுபடத் தயாராயிருப்பதாக மாநில காங்கிரசிற்குத் தெரிவித்திருக்கின்றனர்.

வேறு பலஇடங்களைப் போலவே இங்கும் காங்கிரஸ் கட்சியினர், மாநிலக் குழுவின் சிபாரிசை எதிர்த்து பகிரங்கமான கிளர்ச்சியில் ஈடுபடத் திட்டமிடுவது பண்டித நேருவின் வேண்டுகோள் காற்றில் பறக்கிறது என்பதையே சொல்லுகின்றது என்றும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது.

5,000 தபால் ஊழியர்கள் வெளியேறினர்!

கல்கத்தா, அக். 19—

'துர்க்கா பூசை'க்காக முன்னதாகச் சம்பளம் தருமாறு கோரி, சுமார் 5,000 தபால் ஊழியர்கள், இன்று, தங்களுடைய காரியாலயங்களிலிருந்து வெளியேறி வந்துவிட்டதாகச் செய்தி கூறுகிறது.

மலபார் மாவட்டத்தில் ஒரு 'சோதனை முறை'

கிராம மக்களுக்கு வசதி செய்ய புதிய ஏற்பாடு

சென்னை, அக் 18—

மலபார் மாவட்டத்தில், பல்வேறு கிராமப் பகுதிகளில், பரீட்சார்த்த நடவடிக்கையாகப் பத்து இடங்களில், ஒரே கான்ஸ்டபிள் உள்ள போலீஸ் நிலையங்களை ஏற்படுத்துவதற்குச் சென்னை சர்க்கார முடிவு செய்திருக்கின்றனர்.

ஒவ்வொரு போலீஸ் நிலையமும் இரண்டு அல்லது மூன்று கிராமங்களுக்குச் சேவை செய்யும் என்றும், இதன் மூலம் கிராம மக்களுக்கு விரைவில் போலீஸ் உதவி கிடைப்பதற்கு வசதி ஏற்படும் என்றும், இது கிராம மக்களிடையே நம்பிக்கையை உண்டுபண்ணும் என்றும் சர்க்கார் கருதுகின்றனர்.

இதன் பலா பலன்களுக்குப் பின்னர், மற்ற மாவட்டங்களுக்கும் இம்முறையைப் பரப்புவது பற்றிச் சர்க்கார் யோசிக்கும்.

அத்துடன் இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையினுல் ஏற்படக்கூடிய மற்ரெரு உபயோகம்—போலீஸ் இலாகாவில் கடை நிலையில் இருந்த மாஜி மதுவிலக்கு சிப்பந்திகளை சாத்தியமான அளவுக்கு வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு இது வகை செய்யும் என்று சர்க்கார் கருதுகின்றனர்.

இந்தப்பரீட்சார்த்த நடவடிக்கை இங்கிலாந்து போன்ற சில மேல் நாடுகளில் நன்கு வேலை செய்வதாகக் கூறப்படுகிறது.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

அக். 21 ஆர்பூர்: காலை-திருமணம்; மாலை-பொதுக்கூட்டம்

22 கூனூர்

23 காலை: ராப்ராய்
மாலை: கோத்தகிரி

24 சென்னை (22-வது வட்டம்)

29 பந்தநல்லூர்

30 மாயவரம்
காலை: திருமணம்
மாலை: பொதுக்கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.